CPA
Centre for Policy Alternatives
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

# ஜனாதிபதி செயலணிகள் இரண்டின் நியமனம்

***ஜூன் 5, 2020, கொழும்பு, இலங்கை:***

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவினால் இந்த வாரம் நியமிக்கப்பட்ட இரண்டு ஜனாதிபதி செயலணிகள் தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. மூன்று மாதங்களுக்கும் மேலாக பாராளுமன்றம் கலைக்கப்பட்டது மற்றும் சுதந்திரமானதும் நீதியுமானதுமான தேர்தல்களை நடத்துதல் தொடர்பான விடயத்தில் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து மனுக்களையும் உயர் நீதிமன்றம் விசாரணைக்கு கவனத்தில் எடுத்துக் கொள்ளாது தள்ளுபடி செய்ததை அடுத்து ஏற்பட்ட உடன் பின்னணியில் இந்த நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது அரசியலமைப்பு ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட பாராளுமன்றம் மூன்று மாத காலத்திற்கும் மேலாக கலைக்கப்பட்டுள்ளது. அதனால், நிறைவேற்று அதிகாரத்தின் செயற்பாடுகள் மீது சட்டவாக்க மேற்பார்வை அங்கில்லை. அத்தகையதொரு பின்னணியில், இலங்கையின் அரசியலமைப்பு ரீதியான ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்கான கடுமையான பாதிப்புகளுடன் இரண்டு செயலணிகளினதும் நியமனானது, சர்வாதிகார ஆட்சி மற்றும் இராணுவமயப்படுத்துதல் என்பவற்றின் கவலையேற்படுத்தும் போக்குகளைக் காண்பிப்பவையாக உள்ளன. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஒரு நீண்ட குறிப்புடன் இவ்விரு செயலணிகள் தொடர்பாக அதன் ஆரம்ப கரிசனைகளை, கீழே எழுப்புகின்றது.

வர்த்தமானி இல. 2178/18 மூலம், இலங்கையில் ஒரு “நல்மார்க்கமான, ஒழுக்கமான மற்றும் சட்டக் கீழ்ப்படிவுள்ள சமுதாயத்தைக்” கட்டியெழுப்புவதற்கு ஒரு செயலணியை ஜனாதிபதி நியமித்துள்ளார். இது, பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் தலைமைப் பொறுப்பேற்கப்பட்டு மற்றும் ஆயுதப் படைகள், பொலிஸ் மற்றும் புலனாய்வுத் தலைவர்கள், சுங்கத் திணைக்களப் பிரதானி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் ஆகியோர்களையும் உள்ளடக்கியுள்ளது. குறிப்பாக, செயலணியானது தற்போதைய மற்றும் முன்னாள் இராணுவஇ சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டும் அதிகாரிகளை அதிகளவில் உள்ளடக்கியதாக உள்ளது.

செயலணியின் ஆணை தெளிவற்றதாகவும், பரந்துபட்டதாகவும் உள்ளது, “சமூக எதிர் செயற்பாடுகள்” போன்ற சொற்பதங்கள், குறிப்பான சட்ட அர்த்தம் எதனையும் கொண்டிருக்காமை, அத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராக செயலணி எவ்வாறு சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளது குறித்த கரிசனைகளை எழுப்புகிறது. செயலணி போதை மருந்துகள் அல்லது உள ரீதியான மாற்றங்களை ஏற்படுத்தும் ஔடதங்களின் கடத்துதலைத் தடுப்பதை மாத்திரம் கையாள்வதைக் கருதுகிறதா அல்லது அது பரந்த அளவிலான ஏனைய விடயங்களையும் கையாள்வதைக் கருதுகின்றதா என்பது தெளிவில்லாதுள்ளது. செயலணி கொள்கை உருவாக்கத்திற்கு ஏற்படுத்தப்பட்டதா அல்லது

இருக்கின்ற சட்டங்கள் மற்றும் கொள்கையை அமுல்படுத்துவது அதன் வகிபாகமா என்ற கேள்வி இந்த குழப்பத்திற்கு மேலும் வலுச் சேர்ப்பதாக அமைகிறது. மேலும், அதன் உத்தேசிக்கப்பட்ட வகிபாகம் எதுவாக இருப்பினும், செயலணியானது இருக்கின்ற கட்டமைப்புகளுக்கு சமாந்தரமான ஒரு கட்டமைப்பாக செயற்படும் வகையில், அமைச்சரவை அமைச்சர்களின் வகிபாகத்தை மேவுவதாகவும் மற்றும் அரச சேவைகளுக்கு நேரடியாக கட்டளைகள்/அறிவுறுத்தல்களை விடுக்கும் இயலுமை கொண்டதாகவும் வடிவமைக்கப்பட்டிருப்பதை, பிரச்சினைக்குரியதாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் காண்கிறது. ஏனைய பல விடயங்கள் மத்தியில், இந்த பிரச்சினைகள், உடனடியான கவனத்தை தேவைப்படுத்துகின்ற மிகவும் தீவிரமான பாதிப்புகளை ஏற்படுத்துவையாக உள்ளன.

மற்றுமொரு நடவடிக்கையில், கிழக்கு மாகாணத்தில் தொல்பொருளியல் பாரம்பரிய முகாமைத்துவத்திற்கான ஒரு செயலணியை வர்த்தமானி 2178/17 மூலமாக ஜனாதிபதி நியமித்துள்ளார். தசாப்த காலங்களாக முரண்பாடு மற்றும் மோதலுக்கான மூலங்களாக இருந்து வரும் விடயங்களை இச்செயலணி கையாளும். இரண்டு பௌத்த குருமார்கள், மருத்துவ பீடத்தைச் சேர்ந்த ஒரு பேராசிரியர், தொல்பொருளியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம், பாதுகாப்பு மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கு அதிகாரிகள் மற்றும் ஓர் ஊடக நிறுவனத் தலைவர் ஆகியோர்களை உள்ளடக்கிய இச்செயலணி, அப்பட்டமானதொரு சிங்களச் செயலணி என்பதுடன் அது பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினாலேயே தலைமை தாங்கப்படுகின்றது. செயலணியின் ஆணையாக கருதப்படுவதைக் கவனத்தில் கொள்கையில், அது ஒரு மதத்தைச் சேர்ந்த மத குருமார்களை மாத்திரமே கொண்டு பிரதிநிதித்துவப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாக உள்ளது. ஓரின ஆதிக்க வரலாற்றினை வரைவிலக்கணப்படுத்துவதற்கான ஒரு சாத்தியமான முயற்சியுடன் கிழக்கு மாகாணத்தில் பல்லினத்துவ அடையாளத்தை இச்செயலணி வேண்டுமென்றே அழிக்கின்றதா என ஆரம்பத்திலேயே குழப்பமான கேள்விகளை இந்நடவடிக்கை எழுப்புகின்றது. இப்பகுதியில், தேர்தல் பிரதிநிதித்துவங்கள், சகவாழ்வு மற்றும் நல்லிணக்கம் என்பவற்றின் மீதான பாதிப்புகளுடன் மக்கள் பரம்பலை மாற்றியமைக்கும் இலக்கோடு குடியேற்றம் மற்றும் நில கையகப்படுத்தல் திட்ட முயற்சிகள் பற்றி ஏற்கனவே மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் முன்னைய சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டுள்ளது. இலங்கையின் மோசமான கடந்த காலங்களுடன், இத்தகைய செயலணிகளின் நியமனம் அவற்றின் தேவை, நோக்கம் மற்றும் எதிர்காலத்திலான அவற்றின் தாக்கங்கள் குறித்து கேள்விகளை எழுப்புகின்றது.

நிறைவேற்று அதிகாரம் அதன் சக்தி மற்றும் அதிகாரத்தை அப்பியாசிப்பதன் மீது வழமையான தடைகளும் சமநிலைகளும் இல்லாது "ஆட்சி செய்வதில்" ஒரு சுதந்திரமான நிலையைக் கொண்டிருக்கும் சமயத்தில் இந்த நியமனங்கள், மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தடைகளும் சமநிலைகளும் பாராளுமன்ற ஜனநாயகத்தின் ஓர் அடிப்படை மற்றும் முக்கியமான அம்சமென நாங்கள் உறுதியாக நம்புகிறோம். மேலும், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கரிசனைகள், முக்கியமான தீர்மானங்கள் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளுதல் என்பன ஓய்வுபெற்ற அல்லது சேவையாற்றும் பாதுகாப்பு படை மற்றும் பொலிஸ் ஆளணியினரின் கைகளில் உறுதிப்படுத்தப்பட்டு, இலங்கையில் அரசாங்கம் மற்றும் அதன் ஆளுகையில் இராணுவமயப்படுத்தல் மற்றும் பாதுகாப்புமயப்படுத்தல் என்பவை அதிகரிக்கும் ஒரு நடைமுறைக்கு பிணிக்கப்பட்டவையாக உள்ளன. செயலணிகள் தொடர்பிலான கரிசனைகள் மற்றும் மனக்குறைகள் மற்றும் பதற்றங்கள் என்பவற்றின் சாத்தியமான மோசமடைதல், இலங்கையில் நிச்சயமாக போருக்குப் பிந்திய முன்னுரிமைகளான நல்லிணக்கம் மற்றும் இடைக்கால நீதி என்பவற்றுக்கான சாத்தியங்களை நாசமாக்கும். எங்களது தீவில், சுதந்திரமான பாராளுமன்ற ஜனநாயகத்தின பாதுகாப்பு மற்றும் முன்னேற்றுதல் என்பவற்றுக்கான கண்ணோட்டத்திலிருந்து தங்களது

நடவடிக்கைகளின் பின்விளைவுகளை கவனத்தில் கொண்டு அதற்கமைய செயற்படுமாறு நாங்கள் அரசாங்கம் மற்றும் அனைத்து அரசியல் செயற்பாட்டாளர்களையும் வேண்டிக்கொள்கிறோம்.

Centre for Policy Alternatives (Guarantee) Limited | 6/5, Layards Road, Colombo 5, Sri Lanka Tel: +94112081384, +94112081385, +94112081386 | Fax: +9411 2081388 | Email: info@cpalanka.org | Web: www.cpalanka.org